தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
ஹேவிளம்பி, ஆனி 23, திருவள்ளுவர் ஆண்டு—2048
2017 ஜுலை 7, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொல்லவேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக்கூடிய சிறந்த சொல்வன்மை செயல்மிக்கவர் கூறும் தொழிலை விரைவாகச் செய்ய உலகமே காத்துக் கொண்டிருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

முள்வேலி அமைத்தல்

***21074—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் ஒன்றியம், மங்களகிரி வனப் பகுதியில் உள்ள காட்டு விலங்குகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க கிராமியனஹள்ளி, தென்கரைக் கோட்டை ஆகிய பகுதிகளில் முள்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பெ. பழனியப்பன் அவர்கள், அவருடைய தொகுதியில் காட்டு விலங்குகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க முள்வேலி அமைக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, மொரப்பூர் ஒன்றியம், மங்களகிரி வனப் பகுதியிலிருந்து வரும் வன உயிரினங்களிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க கிராமியனஹள்ளி, தென்கரைக் கோட்டை ஆகிய பகுதிகளில் முள்வேலி அமைக்கும்பட்சத்தில், அப்பகுதியில் அதிகமாக உள்ள மான்கள் போன்ற சாதுவான வன உயிரினங்கள் அதில் சிக்கி உயிரிழக்க நேரிடும் என்பதால், முள்வேலி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.*

திரு. பெ. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வனத்தில் இருக்கக்கூடிய விலங்குகள் விவசாயப் பகுதிகளுக்கு வருகின்றன என்று சொன்னால், அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, வனப் பகுதியில் சரியான தண்ணீர் இல்லை. மற்றொன்று, தாவரங்கள் போன்ற சரியான உணவுகள் அவற்றிற்கு அங்கு கிடைப்பதில்லை. ஆகவேதான், காட்டுப் பன்றிகள் போன்ற விலங்குகள் விவசாயப் பகுதிகளுக்கு வந்து விவசாய நிலங்களைச் சேதப்படுத்துகின்றன. மற்றொன்று;* ecological balance *குறைந்திருக்கிறது. பல்லுயிர் பெருக்கச் சமன்பாடு சற்று குறைந்திருக்கிறது. வனங்களில் எந்த அளவிற்குத் தாவரங்கள் இருக்கின்றதோ, அந்த அளவிற்குத் தாவரங்களை உணவாகச் சாப்பிடுகின்ற விலங்குகள் இருக்க வேண்டும். அதேபோல், எந்த அளவிற்குத் தாவரங்களை உணவாகச் சாப்பிடுகின்ற விலங்குகள் இருக்கின்றனவோ, அந்த அளவிற்கு விலங்குகளைச் சாப்பிடுகின்ற விலங்குகளும் அங்கே இருக்க வேண்டும். அங்கே தண்ணீர்த் தட்டுப்பாட்டின் காரணமாகவும், உணவு கிடைக்காத சூழ்நிலை இருப்பதாலும்,*

2017 ஜூலை 7]

அதுபோன்ற விலங்குகள் பெருகி, விவசாய நிலங்களை சேதப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அங்கு முள்வேலி அமைத்தால் மான்கள் பாதிக்கப்படும் என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அரிய வகை விலங்குகளைப் பாதுகாக்கின்றவகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அதேநேரத்தில், விவசாய நிலங்களைச் சேதப்படுத்துகின்ற காட்டுப் பன்றிகள் போன்ற விலங்குகளைக் கட்டுப்படுத்திடவும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தவகையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்தி, முள்வேலி அமைத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்தால்கூட நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம்.

மேலும், அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் இதுபோன்ற பாதிப்பிலிருந்து காத்துக்கொள்வதற்கு ஏதுவாக, அவர்களுக்கு மானியம் வழங்கினால்கூட நன்றாக இருக்கும். அதாவது, அரசாங்கம் 50 சதவிகிதம்; விவசாயிகள் 50 சதவிகிதம் பங்கு அளித்து, அந்தப் பகுதியில் முள்வேலி அமைத்து, பயிர்களைப் பாதுகாக்க இயலும். எனவே, இதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முன்னாள் அமைச்சர். வன விலங்குகளிடமிருந்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு அவர் மாற்று வழிகள் பற்றிச் சொன்னார்கள். அவரும் ஆலோசனை செய்து, மாற்று வழிகள் மேலும் என்னென்ன இருக்கின்றன என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, நிதி நிலைமைக்கேற்ப அவற்றையும் செய்வதற்கு வனத் துறை உரிய நடவடிக்கையில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வன உயிரினங்கள் விவசாயப் பயிர்களுக்குச் சேதம்

விளைவிப்பதைக் கட்டுப்படுத்தும்வகையில் மாற்று வழிகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் சரியாக இருக்கும்.

அதைப்போலவே, காட்டுப் பன்றிகள் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் 21–6–2017 அன்று காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்காகவே தனியாக ஒரு கேள்வியை இந்த அவையில் கேட்டிருந்தார்கள். அன்றையதினம், ''காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அவற்றைச் சுடுவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து ஆலோசிக்கப்படுகிறது; அதற்குரிய சட்டங்கள் இயற்றப்படும்'' என்று சொல்லியிருந்தேன். அதுகுறித்து, இப்போது ஒரு மகிழ்ச்சியான செய்தியை பேரவைக்கு அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

முற்பகல் 10–05

21–6–2017 அன்று காட்டுப் பன்றிகளைச் சுடுவது பற்றி திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் கேள்வி கேட்டார். உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி ஐயா அவர்களிடம், வனப் பகுதிகளிலிருந்து வந்து சேதம் விளைவிக்கும் காட்டுப் பன்றிகளை சுடுவது பற்றிச் சொல்லியிருந்தோம். 22–6–2017–ல் இதுபோன்ற காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு உத்தரவிடப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. அரசு ஆணை எண் 155, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 22–6–2017–ல் காட்டுப் பன்றிகளைச் சுட்டுக் கொன்று, விவசாயிகளைப் பாதுகாக்கவழிவகுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள், அதற்கான உத்தரவினை வழங்கியிருக்கின்றார் என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்தச் சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற

2017 ஜூலை 7]

காட்டுப் பன்றிகள் போன்ற விலங்குகளால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காக, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. அந்த நடவடிக்கையின் காரணமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோயம்புத்தூர் பகுதியில் காட்டுப் பன்றிகளைப் பார்த்தவுடன் சுடுவதற்கு ஓர் அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என்ற ஒரு நல்ல செய்தியைக் கூறியிருக்கின்றார்கள். தருமபுரி மாவட்டம் அந்தப் பட்டியலில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகின்றேன். அந்தப் பட்டியலில் தருமபுரி மாவட்டம் ஒருவேளை இல்லையென்றால், அந்தப் பட்டியலில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்த்து, அங்குள்ள விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கான அரசாணை வெளியிடப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்ட மாவட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள் குறிப்பிட்ட நம்முடைய தருமபுரி மாவட்டம் அந்தப் பட்டியலில் அமையப்பெறவில்லை. ஏனென்றுசொன்னால், காட்டுப் பன்றிகள் மிகவும் குறைவாக இருப்பதனால், அங்கே கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். ஏற்கெனவே சொல்லியபடி, அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுடுகின்ற உத்தரவின் மூலமாக அதைக் கட்டுப்படுத்தலாம். தருமபுரி மாவட்டம் அந்தப் பட்டியலில் இல்லை. இப்போது புதியதாக வனத் துறையின் மூலமாக தருமபுரி மாவட்டத்தையும் அந்த* hit list–*ல் சேர்த்து, அங்கே உள்ள காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கான அனுமதியை இந்த அரசு வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு எந்தெந்த மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன? காட்டுப் பன்றிகளைச் சுடுவதாகச் சொல்கின்றீர்கள். அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுடப்போவது யார்? வனத் துறையா அல்லது தனியாரே காட்டுப் பன்றிகளைச் சுட்டுக் கொல்லலாமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அண்ணன் அவர்கள் காட்டுப் பன்றிகளை யார் சுடுவது என்று இங்கே கேட்டார்கள். தனியார் யார் வேண்டுமானாலும் சுட்டுக்கொல்ல முடியும் என்று நினைத்து உத்தரவிட்டிருந்தால், தேவையில்லாத பிரச்சினைகள் எல்லாம் வரும் என்று தெரிந்துதான், அரசால் சரியான உத்தரவு போடப்பட்டிருக்கின்றது. அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுடுவதாக இருந்தால், சம்பந்தப்பட்ட வன அதிகாரிகளுக்கு முதலில் தகவல் தெரிவிக்க வேண்டும். V.A.O. முதல் Ranger, DFO, PCCF மற்றும் I.A.S. Officer ஆக இருக்கிற நம்முடைய Department Secretary வரைக்கும் சென்று, அவர்களால் உத்தரவிடப்பட்டு, வனத் துறை அதிகாரிகள்தான் அதைச் சுட வேண்டும்; அவற்றை நீங்கள் அருகிலிருந்து பார்க்க வேண்டும். விவசாயிகளை அந்த உத்தரவு கட்டுப்படுத்தாது; அவர்களின் உயிர் காப்பாற்றப்படும்.

எத்தனை மாவட்டங்களில் காட்டுப் பன்றிகள் சம்பந்தமாக ஏற்கெனவே கணக்கெடுத்திருக்கின்றீர்கள் என்று அவர் மற்றொரு கேள்வியையும் எழுப்பினார். திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், ஓசூர், வேலூர், ஆசனூர் சத்தியமங்கலம், கோவை, மதுரை, ஆத்தூர் மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் ஏற்கெனவே காட்டுப் பன்றிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு

திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.சி. கருப்பணன் அவர்கள் மற்றும் ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் போன்று, காட்டுப் பன்றிகளால் பாதிக்கப்பட்ட தொகுதிகளைச் சார்ந்த அத்தனைபேரும் சொல்லியிருந்தார்கள். அதேபோன்று, மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு.சின்னராஜ் அவர்கள் கேட்ட கேள்விக்கு கடந்த 6 மாத காலமாக எல்லா மாநிலங்களிலிருந்தும் விவரங்களைப் பெற்று, இன்றைக்கு அதனடிப்படையில் ஆணை வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கரி. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், விவசாயிகளுக்கு அந்த உத்தரவு வழங்கப்படவில்லை. காட்டுப் பன்றிகளை எப்படிச் சுடுவது, யார் மூலமாகச் சுடுவது என்கின்ற விவரங்கள் எல்லாம் விளக்கமாக இருக்கின்றன. இதை வேண்டுமென்றால், நீங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். தேவையானால், நாங்களே அதை அனுப்பி வைக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

முற்பகல் 10–10

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், மேற்கு தொடர்ச்சி மலையடிவாரப் பகுதியில் காட்டுப் பன்றிகள், மலையில் நீர்வரத்து இல்லாத காரணத்தினால், இரவு நேரங்களில் கூட்டம் கூட்டமாக 10 கி.மீ. தூரத்திற்குக் கீழே இறங்கி வந்து, விவசாய நிலங்களில் பாதிப்பு ஏற்படுத்துகின்றன. அந்தச் சாலை, தென்காசி, நாகர்கோவில், குற்றாலம் செல்லக்கூடிய main சாலையாக இருக்கிறது. நானே ஒரு முறை இரவு 11–00 மணியளவில் அந்தச் சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, சுமார் 20 காட்டுப் பன்றிகள், சீனி ஆடுகள் போன்ற நிறத்தில், அந்தச் சாலையைக் கடப்பதற்காக சாலையின் பக்கவாட்டில் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தேன். அந்தக் காட்டுப் பன்றிகள் ஒவ்வொன்றும் குறைந்தது

200 அல்லது 300 கிலோ எடையுள்ளவையாக இருந்தன. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், உரிய அனுமதி பெற்று, வனத் துறை அதிகாரிகள் மூலமாக அவை சுடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவரை காட்டுப் பன்றிகளை ஒரே இடத்தில் நிறுத்தி வைக்க முடியுமா? எனவே, வனத்துறையின் முழு உதவியோடு, அப்பகுதியில் அகழிகள் அமைத்தோ அல்லது மலையடிவாரங்களில் சுற்றுச் சுவர் அமைத்தோ, விவசாயிகள் பாதிப்பு அடையாமல் பாதுகாப்பதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீதிபதி அவர்கள் 200 அல்லது 300 கிலோ எடையுள்ள காட்டுப் பன்றிகள் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு நிச்சயமாக காட்டுப் பன்றிகள் கிடையாது. காட்டு எருமைகளையோ அல்லது குட்டி யானைகளையோ பார்த்திருப்பார்போல் தெரிகிறது. (சிரிப்பு) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவற்றைச் சரியாகப் பார்த்துவிட்டுச் சொல்ல வேண்டும். நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு தற்போது காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நீதிபதி அவர்கள் ஊருக்கு அருகில்தான் என் சொந்த ஊர் இருக்கிறது. எனக்கும் அது தெரியும். இருந்தாலும், தற்போது காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள் உத்தரவிட்டிருப்பதன் மூலமாக, அவரும் அதைப் பயன்படுத்தி, அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்றிட இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் காட்டுப்*

பன்றிகளின் தொல்லையினால் விவசாயிகளுடைய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலும் ஒரு காலத்தில் காட்டுப் பன்றிகளைச் சுடக்கூடிய உத்தரவு இருந்தது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தையும் அந்தப் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Private Forests Act–ன்படி உத்தரவு இருக்கின்ற காரணத்தால், ஏழை எளிய விவசாய மக்கள் தங்கள் சொந்த நிலங்களைக்கூட விற்க முடியாத நிலைமையில் அங்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் மிகப் பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், தடிக்காரன்கோணத்தில் இருக்கக் கூடிய பஞ்சாயத்து அலுவலகம்கூட Private Forests Act–ல் இன்றைக்கு இருக்கிறது. எனவே, அதையும் நீக்குவதற்கு உரிய முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காட்டுப் பன்றிகள் நடமாட்டம் பற்றிச் சொல்லி, தனியார் காடுகள் சட்டம் பற்றிக் கூடுதலாகக் கேள்வி கேட்டிருக்கிறார். அது ஒரு தனிப்பட்ட பிரச்சினை; அந்த மாவட்டத்தில் அது ஒரு peculiar பிரச்சினை; அதுகுறித்து ஏற்கெனவே—மாண்புமிகு உறுப்பினர் பெயரென்ன? (குறுக்கீடு) (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் மற்றும் சிலர் அந்தத் தனியார் காடுகள் சட்டம் குறித்து தெரிவித்து, தீர்வு காண வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை; மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, உங்களுக்காகத்தான் நல்ல பதிலை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பெயரை மறந்துவிட்டீர்களே என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை; இந்த அவையில்

சகோதரிகள் அதிக அளவில் இருப்பதால், திடீரென்று மாண்புமிகு உறுப்பினரின் பெயர் நினைவிற்கு வராதது ஒரு தவறா? (சிரிப்பு) (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரின் பெயரைக் கேட்டு, பதிலையெல்லாம் தயாராக வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரின் பெயர் 'திருமதி விஜயதரணி' என்று அனைவருக்கும் தெரிகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணியின் பெயர் தெரியாமல் இருக்க முடியுமா? (பலத்த சிரிப்பு)*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிந்த அளவிற்கு, எனக்குத் தெரியாதது ஒரு தவறு இல்லை. (சிரிப்பு) ஏனென்றால், இந்த அவையில் தினமும் அவர்கள் உங்களைப் பார்த்து, கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்குத் தாங்கள் நல்ல ஆலோசனைகளையும், பதில்களையும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பெயரை மறந்தது தவறுதான். இனி சரியாக நினைவில் வைத்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் காட்டுப் பன்றிகளைச் சுடுகின்ற பிரச்சினை குறித்து கேள்வி கேட்டார். அந்த மாவட்டத்திற்கும் அது ஏற்புடையதுதான். எனவே, அதுபோன்றதொரு பிரச்சினை அங்கு இருந்தால், அங்கிருக்கிற வனத் துறை அதிகாரியிடம், இதுசம்பந்தமாகத் தெரிவித்து, அனுமதி பெற்று, அவற்றைச் சரிசெய்வதற்கு அவர்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதற்கான அனைத்து அனுமதிகளும் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர் அவர்கள் தனியார் காடுகள் விற்பனை குறித்து கேள்வி கேட்டார். இதுகுறித்து தனியாக ஒரு கேள்வி கேளுங்கள்; அல்லது குறிப்புகளைக் கொடுங்கள். தனியாக அதுகுறித்துப் பேசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அதற்குரிய பரிகாரங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.